விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 284 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 12 சனிக்கிழமை (28.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பிரதிப் பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்



15

## வாகனங்களை இறக்குமதி செய்யும் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

வாகனங்களை இறக்குமதி செய்யும் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியினால் நேற்று அழைப்பு விடுக்கப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மத்திய வங்கியிடம் தேவையான பணக் கையிருப்பு இருப்ப 15



## பொது ஒழுங்கை நிலைநாட்ட

# முப்படையினருக்கும் ஜனாதிபதி அழைப்பு

### வர்த்தமானியும் வெளியீடு



(கொழும்பு)

பொது ஒழுங்கை நிலைநாட்ட முப்படையினருக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## விபரீத முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 15

## மின்சார கட்டணத்தை குறைக்கத் திட்டம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கும் திட்டத்தில் பகுப்பாய்வு ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பகுப்பாய்வின் அறிக்கை இலங்கை பொதுப் பயன்பாடுகள் 15

## உத்தியோகபூர்வ இல்லங்களை உடனடியாக மீள ஒப்படையுங்கள்

### முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பயன்படுத்திய அனைத்து உத்தியோகபூர்வ இல்லங்களை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து முன்னாள் அமைச்சர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன குறிப்பிட்டார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் நடைபெறும் திகதி வரை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் 15

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, பூவரசங்குளம் குருக்கல்புதுக்குளம்பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வவுனியா குருக்கல்புதுக்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது விபத்துக்குள்ளான மோட்டார்சைக்கிள் தீப்பற்றி எரிந்த 15

## நவம்பரில் புதிய அரசின் பாதீடு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளமையால் 2025 ஆம் ஆண்டின்முதல்காலாண்டிற்கான இடைக்காலப் பாதீட்டினை புதிய பாராளுமன்றம் கூடவுள்ள 15

### இளையவர்களுக்கு வழிவிடும் வகையில்

## பாராளுமன்றத் தேர்தலில் விக்னேஸ்வரன் போட்டியிடார்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் போட்டியிடமாட்டார் எனத் தெரியவரு 15



## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் மரணம்

### சாவகச்சேரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரியில் பாம்பு தீண்டியதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் பகுதியில் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர்தலில் பொதுக்கூட்டணி

# ரணில்,சஜித்,சந்திரிக்கா தனித்தனியாகக் கலந்துரையாடல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் அடுத்த பொதுத் தேர்தலில் பொதுக் கூட்டணியில் போட்டியிடுவது தொடர்பாக நேற்று தனித்தனியாக கலந்துரையாடியுள்ளனர்.

நிட்டம்புவ பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும்

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் உள்ள அவரது இல்லத்திலும், சஜித் பிரேமதாஸ கொழும்பில் தனது கட்சி உறுப்பினர்களுடனும் இந்தக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.(ம-7)

# புதிய ஆளுநர் வேதநாயகனுக்கு இந்திய துணைத் தூதர் வாழ்த்து



வடமாகாணத்தில் புதிதாக கடமைகளை பொறுப்பேற்ற ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை சந்தித்த இந்திய துணைத் தூதர் சாய் முரளி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். (ம-7)

DHL
MoneyGram. money transfer
Ria
WESTERN UNION WU
உலகெங்குமுள்ளஉறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பியபணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE (C-1275)
No.303, K.K.S Road, Jaffna. TEL : 076 315 6470

### சாவகச்சேரி வைத்தியசாலையின்

# சத்திர சிகிச்சைக் கூடம் — நேற்றுமுதல் இயங்க ஆரம்பித்தது



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம் நேற்று முதற்தடவையாக இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக சத்திரசிகிச்சைக் கூடக் கட்டிடம் மற்றும் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டிடம் ஆகியன நிர்மாணிக்கப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை,வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வருடக் கணக்கில் சத்திர சிகிச்சைக் கூடத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் பூதாகரமாக வெடித்திருந்த நிலையில் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் சத்திர சிகிச்சைப் பிரிவை இயக்க நடவடிக்கை எடுத்து அதில் வெற்றியும் கண்டுள் ளார்.

சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ், மகப்பேற்று நிபுணர் சிறிசுபாஸ்கரன் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் சத்திரசிகிச்சைக் கூடத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துள்ளனர்.

ஆரம்ப தினத்தில் கேர்னியா நோயாளிக்கான சத்திரகிகிச்சை,இரு சிசேரியன் சத்திர சிகிச்சைகள்,மேலும் 4சிறிய சத்திர சிகிச்சைகள் ஆகியன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் பயனாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை அனுப்பும் நிலைமை வெகுவாகக் குறைக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ம-7,30,33)

# மரண அறிவித்தல்

## பரமநாதர் மகேந்திரன்

### (இளைப்பாறிய பொலிஸ் பொறுப்பதிகாரி)

### Retd.Inspector of Police



மலர்வு : 04.12.1939 | உதிர்வு : 26.09.2024

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாமா சந்தி, உடுவில் தெற்கு, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதர் மகேந்திரன் அவர்கள் 26.09.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதர் - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சரஸ்வதி தம்பதிகளின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், கவிதா, ரமேஸ், சுரேஷ், பிரகாஷ், தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகநாதன், ஜனித்தா, நளினி, காலஞ்சென்ற வித்யா மற்றும் ஆதவன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், திருநாவுக்கரசு, தங்கேஸ்வரன், மற்றும் விக்கினேஸ்வரன், கணேசரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் கரிஸ், அர்வின், அபிஷேக், அர்விகா, வர்சனா, சாய்நேகா ஆகியோரின் அப்பப்பாவும், அபிநிஷா, இராகுலன், அஸ்வினி ஆகியோரின் அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (29.09.2024) நண்பகல் 12 மணியளவில் யாமா சந்தி, உடுவில் தெற்கு, மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
திருமதி கு.கவிதா 077 195 7978
திரு.ம.சுரேஷ் 075 820 7707
திரு.ம.பிரகாஷ் 074 363 1035
திருமதி ஆ.தர்சிகா 076 727 5826

(2142)

தகவல் : குடும்பத்தினர்

### செப்–30 முதல் ஒக்–7 வரை

# தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலிலும் 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளதால், ஜனாதிபதித் தேர்தலின் போது தபால் மூல விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் இந்தத் தேர்தலுக்காக மீண்டும் தபால் மூல விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது தேவையற்றது என அவர் விளக்கமளித்துள்ளார்.

இந்தத் தேர்தலில், கடந்த வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படுவதால், கடந்த வாக்காளர் பட்டியலுக்கு அமைய தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் மீண்டும் தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய அனைத்து தரவுகளும் எங்களிடம் உள்ளன.

ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு நீங்கள் சமர்ப்பித்த தபால் மூல விண்ணப்பம் ஏதேனும் காரணத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தால், நிராகரிப்பு தொடர்பான விடயத்தை சரி செய்து மீண்டும் தபால் மூல விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதாவது கடந்த முறை தபால் மூல விண்ணப்பங்கள்நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்றார். (ம-7)

# முன்னாள் எம்.பிக்களின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மீள அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் எம்.பிக்களின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் சபாநாயகர், முன்னாள் பிரதி சபாநாயகர் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் பாதுகாப்பை தவிர்த்து, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று முதல் மீள அழைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை, கனிய மணல் அகழ்வினை நிறுத்தக் கோரி

## ஜனாதிபதி, பிரதமருக்கு தபாலட்டை அனுப்பி வைப்பு





**(மன்னார்)**

**மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயற்பாடுகளை நிறுத்தக்கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தபால் அட்டை மூலம் கோரிக்கைகள் முன் வைக்கும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் பேருந்து தரிப்பிடத்தில் இடம்பெற்ற குறித்த தபாலட்டை அனுப்பும் நிகழ்வில் நூற்றுக் கணக்கான மக்கள், மதத்தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு தபாலட்டைகளை அனுப்பி வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-285)

# பொதுத்தேர்தலில் பொதுக்கட்டமைப்பு போட்டி?



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப் பாகப் போட்டியிடுவது தொடர்பில் அரசியல் கட்சியினருக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் இழுபறியில் முடிவு எட்டப்படாமல் முடிவு றுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்றது.

இந்நிலையில், பாராளுமன்றத் தேர்தலில் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவில் அமைப்புகளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையானது தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதா? இல்லையா? என்ற முடிவை எடுப்பதற்கு கால அவகாசத்தை கோரியுள்ளது. (6)

## மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

(ரியாட்)

சவுதி அரேபியாவின் முடிவால் சர்வதேச சந்தையில் நேற்று முன்தினம் எண்ணெய் விலைகள் 3 சதவீதத்துக்கு மேல் சரிவடைந்துள்ளதாக தி பைனான்சியல் டைம்ஸ் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி ப்ரெண்ட் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு $1.86 அல்லது 2.53% குறைந்து 71.60 அமெரிக்க டொலர்களாக பதிவானது.

உலகின் முதன்மையான மசகு எண்ணெய் ஏற்றுமதியாளரான சவுதி அரேபியா, டிசம்பர் மாதத்தில் OPEC உறுப்பினர்கள் மற்றும் நட்பு நாடு களுடன் சேர்ந்து உற்பத்தியை உயர்த்த தீர்மானித்ததன் பின்னர் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (6)


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி.
**பாமதி அமிர்தகுமார்**
(ஆசிரியை, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

தோற்றம் 13.09.1970 | மறைவு 28.09.2014

பண்புடைத் தலைவி பாமதி
பாரினை நீங்கிச் சென்றாய்
பத்தாண்டுகள் பரிதவித் துலகில்
பாவிகளெமை நொந்திடச் செய்தாய்
பள்ளிக் கடமைகளில் சிறந்து
பாச நட்புறவுகள் பேணிக் கொண்டாய்
பரிவுடன் எமையெல்லாம் தேற்றிப்
பாதையெலாம் துணை நீ வருவாய்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உம் பிரிவால் துயருறும்

(சி-2122)


## முப்படையினருக்கு ஜனாதிபதி அழைப்பு-வெளியான வர்த்தமானி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக முப்படையினருக்கு அழைப்பு விடுக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை உறுப்பினர்கள் அனைவரையும் அழைப்பதற்கான உத்தரவு அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர் முதன்முறையாக முப்படையினரை அழைக்கும் வர்த்தமானி அறிவித்தல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன புதிய தலைவராக ராஜகருணா

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக டி.ஏ.ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவராக முன்னதாக செயற்பட்ட சாலிய விக்ரமசூரிய நேற்று முன்தினம் பதவி விலகியிருந்தார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தென்னாபிரிக்கா தொடரே கடைசி டெஸ்ட் போட்டி

### ஓய்வினை அறிவித்த ஷகிப்



"ஒக்டோபரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டாக்கா டெஸ்ட் போட்டியே தனக்கு கடைசி டெஸ்ட் போட்டி என்று" பங்களாதேஷ் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான கான்பூர் டெஸ்டுக்கு முன்னதாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இந்த ஆண்டு நடை பெற்ற உலகக் கிண்ணம் மற்றும் தனது கடைசி ரி-20 போட்டியில் ஏற்கனவே விளையாடியதையும் அவர் இதன்போது நினைவு படுத்தினார்.

எனினும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவர் தொடர்ந்தும் விளையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடந்த அமைதியின்மையில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அவ்வேளை ஷகிப், அவாமி லீக் தலைமையிலான அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவருக்கு எதிராக எதிர்ப்புகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது (6)

## சிக்சர் மன்னன் நிகோலஸ் பூரன்

### ரி-20 அரங்கில் சாதனை



வெஸ்ட் இண்டீசில் கரீபியன் பிரிமியர் லீக் "ரி-20" தொடர் நடக்கிறது. லீக் போட்டியில் டிரின்பாகோ நைட் ரைடர்ஸ், செயின்ட் கிட்ஸ் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய செயின்ட் கிட்ஸ் அணிக்கு கப்டன் பிளட்சர் (93), கைல் மேயர்ஸ் (60) கைகொடுத்தனர். 20 ஓவரில் செயின்ட் கிட்ஸ் அணி, 4 விக்கெட்டுக்கு 194 ரன் எடுத்தது. டிரின்பாகோ அணியின் கிறிஸ் ஜோர்டான் 2 விக்கெட் சாய்த்தார். கடின இலக்கைத் துரத்திய டிரின் பாகோ அணிக்கு ஜேசன் ராய், நிகோலஸ் பூரன் இணைந்து சிக்சர் மழை பொழிந்தனர்.

ராய் 34 பந்தில் 64 ரன் எடுத்தார். பூரன் அரைசதம் விளாச, டிரின்பாகோ அணி 18.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 197 ரன் எடுத்து 7 விக்கெட்டில் வெற்றி பெற்றது. பூரன் (93 ரன், 43 பந்து), கப்டன் போலார்டு (10) அவுட்டா காமல் இருந்தனர்.

இப்போட்டியில் பூரன் 7 சிக்சர் அடித்தார். இதையடுத்து "ரி-20" கிரிக்கெட்டில் ஒரே ஆண்டில் 150 சிக்சர் அடித்த உலகின் முதல் வீரர் ஆனார். இவர் 63 இன் னிங்சில் இதுவரை 151 சிக்சர் அடித்துள்ளார். முன்னதாக வெஸ்ட் இண்டீசின் கெய்ல் 2015இல் 36 இன்னிங்சில 135 சிக்சர் அடித்து இருந்தார்.

"ரி-20" அரங்கில் ஒரு ஆண்டில் 2000 ரன் எடுத்த இரண்டாவது வீரர் ஆனார் பூரன். இவர் 63 இன்னிங்சில் 2022 ரன் எடுத்துள்ளார். பாகிஸ்தானின் முகமது ரிஸ்வான் 2021 இல் 48 இன்னிங்சில் 2036 ரன் எடுத்து முதலிடத்தில் உள்ளார். அலெக்ஸ் ஹேல்ஸ் (61இல் 1946 ரன், 2022) 3ஆவது இடத்தில் உள்ளார்.

சர்வதேசம், உள்ளூர் என ஒட்டுமொத்த "ரி-20" அரங்கில் பூரன், இதுவரை 563 சிக்சர் (361 போட்டி) அடித்து, 4ஆவது இடத்தில் உள்ளார். முதல் மூன்று இடத்திலும் வெஸ்ட் இண்டீசின் கெய்ல் (463ல் 1056), போலார்டு (683இல் 892), ரசல் (522இல் 709) உள்ளனர். (6)

## இங்கிலாந்து வீரர் ஜோஷ் ஹல் விலகல்



இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகள் ரி-20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற ரி-20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. இதனைத் தொடர்ந்து நடைபெற்று வரும் ஒருநாள் தொடர் 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலையில் உள்ளது.

இந்தத் தொடர் முடிந்தவுடன் இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளது. அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமான உயரமான வேகப்பந்து வீச்சாளரான ஜோஷ் ஹல் வரவிருக்கும் பாகிஸ்தான் தொடரில் இருந்து விலகி உள்ளார். காயம் காரண மாக அவர் விலகி உள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் இவர் 3 விக்கெட்டு களை கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## ஆலோசகராக கொல்கத்தா அணியில் இணைந்த பிராவோ

### சி.எஸ்.கே ரசிகர்கள் கவலை




ஐபிஎல் 2025ஆம் ஆண்டு சீசனுக்கான மெகா ஏலம் வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது. ஒவ்வொரு அணியும் பல மாற்றங் களை கொண்டு வந்துள்ளது. பயிற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர் ஆகியோரை நியமித்து வருகிறது.

இந்நிலையில் வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஜாம்ப வான் மற்றும் சிஎஸ்கே அணியின் முன்னாள் பந்து வீச்சு பயிற்சியாளர் பிராவோ கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஆலோசகராக நியமிக் கப்பட்டுள் ளார்.

இதனை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் அதிகார பூர்வ சமூக வலைத்தள பக்கத் தில் அறிவித்துள்ளது. இது சிஎஸ் கே ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் அற்ற ஆட்சிக்கு ஜப்பான் முழு ஆதரவு

## நிறுத்தப்பட்ட திட்டங்களும் மீள ஆரம்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் முதன்மைப் பணியாகக் கருதப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகளை இல்லா தொழிக்கும் வேலைத்திட்டத்திற்கு ஜப்பான் அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்குவதோடு இலங்கையுடன் தொடர்ந்தும் நெருக்கமாக செயற்பட தயாராக இருப்பதாகவும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்தார்.

ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டார். ஜப்பானிய அரசாங்கத்தின் உதவி யுடன் ஆரம் பிக்கப்பட்டு தற்போது இடை நடுவில் நிறுத் தப்பட்டுள்ள 11 திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனவும் ஜப்பான் தூதுவர் உறுதியளித்தார். இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜப் பான் தூதரகத்தின் பிரதித் தலைவர் நயோக்கி கமோஷிடா மற்றும் ஜனா திபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோரும் கலந்து கொண்டனர். (6)

# போக்குவரத்து விதி மீறலில் ஈடுபட்ட 12 பேர் கைதாகி

## பிணையில் விடுவிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் வீதிப்போக்குவரத்து பொலிஸாரினால் மேற்கொள் ளப்பட்ட சோதனைகளின் போது மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, போக்குவரத்து விதி முறைகளை மீறிய குற்றச் சாட்டில் 12 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளதுடன் தடையப் பொருட் கள் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள் ளார். (6-316)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 24.08.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர். மாணிக்கம் இலட்சுமிகாந்தன்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 19.09.2024 கடந்த வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 29.09.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஸ்ரீபதி,வதிரி (C-1273) தகவல்: குடும்பத்தினர்


# நஷ்ட ஈடாக ரூ.53 இலட்சம் செலுத்திய

## முன்னாள் எம்.பி

(கொழும்பு)

விபத்து இடம்பெற்று இரண்டு வருடங்களின் பின்னர் தான் பயன் படுத் திய சொகுசு வாகனத்திற்கான நஷ்ட ஈட்டை அண்மையில் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு வர் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்த மேல் மாகாண சபையின் செயலாளர் தம்மிக்க கே. விஜேசிங்க மேல் மாகாண சபைக்கு சொந்தமான சொகுசு வாகனத்தை பயன்படுத்திய போது விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் விதான கடந்த 24ஆம் திகதி மாகாண சபைக்கு 53.38 இலட்சம் ரூபாயை செலுத்தியுள்ளதாகத் தெரிவித்தார். (6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

MoneyGram. Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974


# இராசிபலன்

28.09.2024
புரட்டாதி 12, சனிக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 6.00 மணிவரை
ஆயிலியம் முழுவதும்.
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 ணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - மூலம்

வளவன்

**மேஷம்** அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், தொழில் போட்டிகள் மாறும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு.

**கடகம்** பயணங்கள் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிள்ளைகளால் சிறு விரயங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்** வேலைச்சுமை அதிகரிக்கும் வாய்ப்புண்டு, வரவை விட செலவுகள் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையால் சுப விரயங்கள் கூடும்.

**கன்னி** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள இடம்பெறலாம்.

**துலாம்** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு** சுணங்கிய காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் மேலோங்கும் நாள், ரோகபயமுண்டு.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெற லாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக் கிக் கொள்ள முற்படுவீர்கள், கௌரவமான சம்பவங்கள்இடம்பெறலாம்.

**கும்பம்** குடும்பத்தில் இருந்த மனஸ்தாபங்கள் அகலும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று கைகூடும் வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

குற்றம் காண்பவனுக்கு தன் குற்றம் காண நேரம் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையில் ஆரம்பமான கண்காட்சி




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பொன் விழா மற்றும் சர்வதேச சுற்றுலா தினம் ஆகியவற்றை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் உணவு மற்றும் கைப்பணிப்பொருள் சந்தை, கலாசார திருவிழா நேற்று ஆரம்பமானது.

இதன்போது பல்வேறு வகையான உணவு உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், கைவினைப் பொருட்கள் என பலவிதமான உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சியுடன் விற்பனைகளும் இடம்பெறுகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

குறித்த கண்காட்சியானது இன்று மற்றும் நாளை வரை நடைபெறவுள்ளது. (6)



# வடமாகாண ஆளுநராக வேதநாயகன் பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்றுள்ள வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்..

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கடமைகளைப் பொறுப்பேற்ற நிலையில் ஆளுநர் சர்வமதத் தலைவர்களிடம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (6-33)

# தியாக தீபத்திற்கு வவுனியாவில் அஞ்சலி

(வவுனியா)

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் தமிழர்களுக்குமான தீர்வு கிடைக்கும் என்பது நமக்கு நம்பிக்கை இல்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தினர் தெரிவித்தனர். (6)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தால் நடாத்தப்படவுள்ள வாசிப்பு மாத போட்டிகள்-2024

தொனிப்பொருள் : "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"

**வாசகருக்கான நிகழ்ச்சிகள்- வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் உப அலுலகத்திற்கு உட்பட்ட**

**1. சிறந்த வீட்டுத்தோட்டம் (Best Home Garden)**

- போட்டியாளர்கள் தங்கள் வீட்டில் வளர்த்து வந்த செடிகள், காய்கறிகள், மூலிகைகள், பழம், காய்கள் மற்றும் தாவரங்களின் புகைப்படங்களை அனுப்புதல் வேண்டும்.

  நிபந்தனை : இயற்கையான வளர்ப்பு முறைகள், ஆரோக்கியமான மற்றும் நல்விளைவுடைய பயிர்கள்.

**2. வீட்டு நூலகம் (Home library)**

- போட்டியாளர்கள் தங்கள் வீட்டுப் புத்தக தொகுப்பின் புகைப்படங்கள் அல்லது காணொளிகளை அனுப்பி, அதில் உள்ள விதவிதமான புத்தகங்களைப் பற்றி சுருக்கமாக விவரிக்கலாம்.

  நிபந்தனை : போட்டியுடன், நூலகம் வளர்த்த அனுபவம் அல்லது புத்தகங்கள் அவர்களின் வாழ்க்கையை எப்படி மாற்றியது போன்ற கதை பகிர்வுகளும் மேற்கொள்ளவேண்டும்.

**3. நூல் பரிந்துரை (Book Recommendation)**

- நூல் பரிந்துரை நிகழ்வு வாசிப்பு ஆர்வத்தை ஊக்குவிப்பதோடு, சமூகம் முழுவதும் வாசிப்பு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்வாகும்.

  நிபந்தனை : வாசகர்கள் தங்கள் விருப்பமான புத்தகங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து, அது குறித்து சிறிய உரையாடல் நடத்தலாம்.

சிறந்த வீட்டுத்தோட்டம், வீட்டு நூலக போட்டியில் பங்குபற்றுபவர்கள் புகைப்படங்களுடன் பெயர் மற்றும் முகவரியினையும் நூல் பரிந்துரை நிகழ்வில் பங்குபற்றுபவர்கள் பெயர் மற்றும் முகவரியுடன் பரிந்துரை செய்யவுள்ள நூலின் பெயரையும் குறிப்பிட்டு 076 307 4714 எனும் வட்சப் இலக்கத்திற்கு அல்லது வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பொது நூலகம், பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ / அலுவலக நேரத்தில் நேரடியாகவோ 2024.10.11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நூலகர்,
பொது நூலகம் - புத்தூர்

(சி-1272)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தால் நடாத்தப்படவுள்ள வாசிப்பு மாத போட்டிகள்-2024

தொனிப்பொருள் : "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"

**சிறந்த சனசமூக நிலையங்களுக்கான தெரிவு- வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் உப அலுலகத்திற்கு உட்பட்ட**

**புள்ளியிடலுக்கான நிபந்தனைகள்**

1. சனசமூக நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பான பதிவேடு பேணுவதுடன், 2024 ஆகஸ்ட் மாதத்திற்கான பதிவேட்டின் பிரதி இணைத்தல் வேண்டும்.
2. உள்ளூர் எழுத்தாளர்களின் புத்தகங்களை தங்களது சனசமூக நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தால் அதன் புகைப்படப்பிரதி.
3. 2023-2024 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் சனசமூக நிலையங்களினால் நடாத்தப்பட்ட நிகழ்வுகள், சமூக செயற்றிட்டங்கள் தொடர்பான பதிவுகளின் விபரங்கள். (பதிவேட்டின் பிரதி)
4. சனசமூக நிலையங்களினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான ஏதேனும் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் மேற்கொண்டிருப்பின் அதன் பதிவுகள்.
5. 2023-2024 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் சனசமூக நிலையத்திற்குட்பட்ட மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கு ஏதேனும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிகள், விளையாட்டு நிகழ்வுகள் நடாத்தப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரம்.
6. இரண்டு (02) வருட காலத்தில் விவசாயம் அல்லது சுயதொழிலை மேம்படுத்த ஏதேனும் கடன் திட்டம் வழங்கப்பட்டிருப்பின் விபரம்.

போட்டியில் பங்குபற்றவுள்ள சனசமூக நிலையங்கள் தங்களின் போட்டி நிபந்தனைக்குரிய ஆவணங்களின் பிரதிகளுடன் சனசமூக நிலையத்தின் தலைவர், செயலாளர் பெயர்கள் மற்றும் முகவரி, தொடர்பு இலக்கங்களைக் குறிப்பிட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பொது நூலகம், பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ/ அலுவலக நேரத்தில் நேரடியாகவோ 2024.10.11 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நூலகர்,
பொது நூலகம் - புத்தூர்
தொடர்புகளுக்கு : 076-307 4714

(சி-1271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-17 வேலப்பர் வீட்டு 1 ஆம் ஒழுங்கை, 25 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேலு இளையதம்பி இராசையா என ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இதன் பின் 1 ஆம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமானது இலக்கம் 3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைச் சேர்ந்தவர்களான முத்து சுப்பையாவும் பெண் சிவபாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதாகிருஸ்ணன் முகதாவில் 2008.03.30 இல் 333 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 அளவுகொண்ட ஆதனத்தை 1978 ஆம் ஆண்டு மாசி மாதமளவில் இளையதம்பி இராசையா என்பவரிடம் இருந்து கொள்வனவு செய்து அபிவிருத்தி வேலைகள் மேற்கொண்டும் கல்வீடு கட்டி வசித்தும் இன்றைவரை தங்குதடையின்றி ஆட்சி செய்தும் வருவதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் இவ்வாதனம் தொடர்பான உறுதிகள் நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக தொலைந்து விட்டன என்றும் இதுபற்றி பல வழிகளில் தேடுதல் செய்தும் கிடைக்கப்பெறவில்லை எனவும் இவ்வாதனத்தை 1978 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை எவ்வித தங்குதடையுமின்றி எவரது தலையீடும் குழப்பமும் இன்றியும் இன்னும் எவருக்கேனும் வாடகையோ, பயன்களோ செலுத்தாமலும் சேவை எதுவும் செய்யாமலும் எவரது உரித்தையும் அங்கீகரிக்காது எதிர் உரித்தாகவும் உடமை கொண்டு ஆட்சி செய்து வருகின்றோம் எனவும் தெரிவித்து எமக்குரிய ஆதனம் என வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த முத்து சுப்பையாவும் பெண் சிவபாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு கே.எம் இராதாகிருஸ்ணன் முகதாவில் 2008.06 18 இல் 340 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 அளவு கொண்ட அதே ஆதனத்தை தமது மகள் சுப்பையா கவிதா என்பவருக்கு தமது சீவிய நலவுரித்திற்கமைவாக நன்கொடையளித்துள்ளனர்.

இதன்பின் இரண்டாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமானது இலக்கம் 221, கண்டி வீதியில் வசிக்கும் இளையதம்பி இராசையா என்பவர் பிரசித்த நொத்தாரிசு பிறின்ஸ் செல்லப்பா இராசக்கோன் முகதாவில் 24.12.1979 இல் 179 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியில் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 1/4 இனை தனது மகன் இராசையா பாஸ்கரன் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார். இலக்கம் 221 கண்டி வீதியைச் சேர்ந்தவரும் தற் சமயம் ஜேர்மனியில் வசிப்பவருமான இராசையா பாஸ்கரன் என்பவர் இதன்பின் 2 ஆம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தை தனது அற்றோனித் தத்துவக்காரர் செல்லத்துரை அருளானந்தம் மூலம் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதாகிருஸ்ணன் முகதாவில் 18.06.2008 இல் 342 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மேற்குறித்த ஆதனத்தில் விஸ்தீரணம் நிலப்பரப்பு குளி 0.6 அளவுடைய ஆதனத்தை பாதைக்காக சுப்பையா கவிதா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை I**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று சீவியா தெரு இறை "பட்டன் கட்டி வளவும் பத்தினி வளவும் புளியடி வளவும்" நிலப்பரப்பு 1 ம் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இது நில அளவையாளர் பி.தவராஜா அவர்களால் 2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2048 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு1 எனச் சுட்டப்பட்ட பாகமாகும். இந்த நிலப்பரப்பு 1 இற்கும் எல்லைகள்

கிழக்கு -இராசையா பாஸ்கரனின் ஆதனமும் ஒன்பது அடி அகலப்பாதை நிலமும்
வடக்கு- ஒழுங்கை
மேற்கு- மருதவாணன் பெண் நகுலேஸ்வரியின் ஆதனம்
தெற்கு -செல்லத்துரை பெண் சிவசோதியின் ஆதனமும் இதடாங்கலும்
இன்னும் தென்கிழக்கேயுள்ள கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் வாய்க்கால் வழிப் பாவிப்புரித்தும் இன்னும் வடக்கு எல்லை ஓரமாக கிழக்கு பக்கமாயுள்ள ஒன்பது அடி (9) அகல பாதை நிலத்தால் சென்று ஸ்ரான்லி கல்லூரி வீதியை சென்றடையலாம்.

**ஆதன அட்டவணை 2**

வடமாகாணம்: யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று சீவியா தெரு இறை "பட்டன் கட்டி வளவும் பத்தினி வளவும் புளியடி வளவும்" நிலப்பரப்பு இரண்டே கால்(2 1/4) ஆனால் நில அளவையாளர் பி.தவராசா அவர்களால் 18.11.2007 அன்று அளந்து வரைந்த 2948 ஆம் இலக்கப்படத்தின் படி நிலப்பரப்பு இரண்டு குளி மூன்று (நி.ப.2 குளி 3) இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு சைபர் குளி ஆறும் (நி.ப.0 குளி6) இது மேற்படி இலக்கப்படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்டுள்ளது.

எல்லைகள்-
கிழக்கு- ஸ்ரான்லி கல்லூரி வீதி
மேற்கு-சுப்பையா கவிதாவின் ஆதனம்
வடக்கு-ஒழுங்கை
தெற்கு-சுப்பையா கங்காதேவியின் ஆதனமும் இதனடாங்கலும்
இன்னும் தெற்கேயுள்ள கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் வடக்கு எல்லை ஓரமாக ஒன்பது அடி (9') பாதை நிலத்தினூடாக மேற்கு எல்லை ஆதனக்காரியான சுப்பையா கவிதா சென்று ஸ்ரான்லி கல்லூரி வீதியைச் சென்றடையலாம்.

தற்போது ஆதன அட்டவணை 1 இல் விபரிக்கப்பட்ட நிலப்பரப்பு 1 விஸ்தீரண அளவு கொண்ட ஆதனத்தையும் ஆதன அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 6 அளவு கொண்ட பாதை நிலப்பரப்பையும் சேர்த்த ஆதனமான நிலப்பரப்பு 1 குளி 06 அளவுகொண்ட ஆதனத்தை சுப்பையா கவிதா என்பவர் தனது பெயருக்கு எமது ஆதன வரிப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுப்பையா கவிதா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C-1269)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -25 முஸ்லீம் கல்லூரி வீதி, ஆதன இல 27, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் என்.எம்.காவது பெண் உம்மா குலது என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை தெற்கு, நாவாந்துறை பள்ளுவிலித்தோட்டம் இறையில் மொகமட் யூசுப் பஜே லாபிர் உம், மொகமட் யூசுப் ஜசிந்தாவும், மொகமட் யூசுப் ஜிப்லாஸ் உம், மொகமட் யூசுப் றமீஸ் உம், மொகமட் யூசுப் யௌசாத் உம், மொகமட் யூசுப் நினோசாவும் 25.08.2010 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.எம். றமீஸ் முகதாவில் 1987 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் மொகமட் யூசுப் ஜப்ரீன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தெற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட "பள்ளுவிலித்தோட்டம்" உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் 07.08.2010 ஆம் திகதி அளந்து விபரித்த 1533 ஆம் இலக்க படத்தின்படி துண்டு 1 என குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 01 கட்டடமும் பயிர்வகைகளும்.

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு : முஸ்லீம் கல்லூரி வீதி
வடக்கு :விஜயராஜா புதர்சினியின் ஆதனம்.(Vijayarajah putharshini)
மேற்கு : உம்முகுல்தூம் பெண் கௌது. (Ummukulthoom wife of Howdu)
தெற்கு : வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆதனம்.
இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை மொகமட் யூசுப் ஜப்ரீன் என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் யூசுப் ஜப்ரின் என்பவரின் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-1270)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்:5'11"
தகைமை/தொழில்: BA, MSC, Post Office(Employ) London
எதிர்பார்ப்பு: பட்டதாரி உயர்பதவி
தொ.இ: B/14801

பிறப்பு:1994- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 71 7 இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Bsc, Msc, Research Assistant(UK)
எதிர்பார்ப்பு: பட்டதாரி (IT Field )
தொ.இ: B/14802

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்:6'1"
தகைமை/தொழில்: IT Engineer (Canada)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/14803

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்: சுவாதி
1 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது சுய தொழில் செய்வோர்
தொ.இ: G/14811

பிறப்பு-2000- இந்து
நட்சத்திரம்: பரணி
11 இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/ தொழில்: Bsc, Clinical Nurse
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/14813

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
4 இல் சூரி செவ்
கி.பா: 9 1/4
உயரம்:5'
தகைமை/ தொழில்:BA, Teacher
எதிர்பார்ப்பு: தொழில் புரிவோர்
தொ.இ: G/14815

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

## பிரான்ஸ்,பிரிட்டன் ஆதரவு



(நியூயோர்க்)

ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு பிரான்ஸ் ஜனா திபதி இமானுவேல் மக்ரான், பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

ஐ.நா சபையில் 200 நாடுகள் அங்கம் வகித்தாலும் பாதுகாப்பு கவுன்சிலில் 15 நாடுகள் மட்டுமே உள்ளன. அவற்றில் 5 நாடுகள் மட்டுமே வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பினர்கள்.

மீதமுள்ள 10 நாடுகள், 2 ஆண்டுக்கு ஒரு முறை தேர்வு செய்யப்படும் தற்காலிக உறுப்பினர்கள்.

நிரந் தர உறுப்பினராக எங்களுக்கும் இடம் தர வேண்டும் என்பது இந்தியாவின் நீண்ட கால கோரிக்கை.

இந்நிலையில், பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர். பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் கூறியதாவது, பிரேசில், இந்தியா, ஜப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு இடம் அளிப் பதை நாங்கள் ஆதரிக் கிறோம் என்றார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் பேசியதாவது,

ஐ.நா.வை மேலும் திறனுடையதாக மாற்ற வேண்டும். பாதுகாப்பு சபை அதிக அளவு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். ஜேர்மனி, ஜப்பான், இந்தியா மற்றும் பிரேசில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

பாதுகாப்பு கவுன்சிலின் பணி முறைகளில் மாற்றம், பெரிய குற்றச் செயல்களில் வீட்டோ உரிமையின் வரம்புகளை நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (6)

# இலக்
# போரில

## இஸ்ரேல்

(ஜெருசலேம்) —
"ஹிஸ்புல்லா
இராணுவம் தொட
பிரதமர் பெஞ்ச
தெரிவித்துள்ளார்.

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டின் புறநகர்ப்பகுதியைக் குறிவைத்து இஸ்ரேலிய விமானப்படை வான்வழித் தாக்குதல் நடத்தியதில் இருவர் உயிரிழந்தனர்.

15 பேர் பலத்த காயமுற்றனர். இந்நிலையில்

ஐக்கிய
சபைக்
ற்க ெ
ரிக்கா
அவர் க
உல
நிறுத்த
நாங்கள்
வான்
களை

# ரூ.418 கோடி செலவில் தனித்தீவு வாங்கிய

## டுபாய் தொழிலதிபர்

(டுபாய்)

துபாயைச் சேர்ந்தவர் தொழிலதிபர் ஜமால் அல் நடக். கோடீஸ்வரரான இவரது மனைவி சௌதி அல் நடக். இங்கிலாந்தில் பிறந்த சௌதி அல் நடக், துபாயில் படித்துக் கொண்டிருந்தபோது ஜமால் அல் நடக்கைச் சந்தித்துள்ளார். பின்னர் இருவருக்கும் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆகியுள்ளது.

மனைவி மீது மிகவும் அன்பு கொண்ட ஜமால் அல் நடக், அவருக்காக ஏராளமான பரிசுப் பொருட்களை வழங்கி உள்ளார். இந்த நிலையில் தனது மனைவி நீச்சல் (பிகினி) உடையில் குளிப்பதற்காக ஆசைப்பட்ட நிலையில், அவருக்காக ஜமால் அல் நடக் ஒரு தீவையே விலைக்கு வாங்கியுள்ளார்.

இதுதொடர்பாக சௌதி அல் நடக், அதுகுறித்த பதிவை தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தனியுரிமை மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக தீவின் சரியான இருப்பிடத்தின் தகவலை வெளியிட சௌதி அல் நடக் மறுத்துவிட்டார். ஆனால், தனக்காக தனது கணவர் ஜமால் அல் நடக், இந்தத் தீவை வாங்குவதற்காக 50 மில்லியன் டொலர் (இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் ரூ.418 கோடி) செலவிட்டதாகக் கூறியுள்ளார்.

ஏற்கெனவே சௌதி அல் நடக், தனது ஆடம்பர வாழ்க்கை தொடர்பான வீடியோக்களை வெளியிட்டுள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு சௌதி அல்நடக்கின் பிறந்தநாளன்று அவரது கணவர் ரூ.60 லட்சம் மதிப்புள்ள பொருட்களை பரிசாக கொடுத்ததாக சௌதி அல் நடக் வீடியோ வெளியிட்டிருந்தார்.

அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்தது. அதில் சௌதி அல் நடக் ஷாப்பிங் செய்வதற்காக ரூ.12 லட்சம் செலவழித்ததாகவும், கணவருடன் ரூ.1 லட்சம் செலவழித்து இரவு விருந்து சாப்பிட்டதாகவும், ஹெர்ம்ஸ் பிராண்ட்டின் ஷோரூமில் ரூ.29 லட்சம் மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் வாங்கியதாகவும் அந்த வீடியோவில் தெரிவித்திருந்தார்.





அந்த வீடியோ வைரலான நிலையில் பயனர்கள் பலரும் அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துகளைப் பதிவிட்டி ருந்தன. (6)

# இந்தியா- அவுஸ்திரேலியா
# வர்த்தக கூட்டமைப்பு

(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் அடிலெய்டில் இந்தியா- அவுஸ்திரேலியா வர்த்தக கூட்டமைப்பு தலைவர்களான பியூஷ் கோயல் மற்றும் அவுஸ்திரேலியா அமைச்சர் டான்பெர்ரல் ஆகியோர் கலந் துரையாடியிருந் தனர். இதில் உலக வர்த்தக கூட்டுறவு, இருநாட்டு வர்த்தகம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இருநாடுகள் இடையே 2030 ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் டொலர் வர்த்தகம் செய்ய இலக்கு நிர் ணயிக் கப் பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இரு நாட்டு வர்த்தக உறவு தொடர்பாக அமைப்பு உருவாக்கப்பட்டு முதல் ஒன்றரை ஆண்டுகளில் 30 பில்லியன் டொலர் வர்த்தகம் நடந்துள்ளது. இது போன்ற உறவு இன்னும் உயரும்.

அவுஸ்திரேலிய பல்கலை,
இந்திய மாணவர் களுக்
ஆராய்ச்சிக்கு 5 மில்லிய
டொலர் ஒதுக்கவும், கலாசார
சமூக உறவு மேம்படுத்த
மில்லியன் டொலர் ஒதுக்கவு
முடிவு செய்யப்பட்டது.

இது குறித்து, மத்தி
அமைச்சர் பியூஷ்கோயல் சமூ
வலைதளத்தில் வெளியிட்டுள்
பதிவில், "பல்வேறு துறைகளி
அவுஸ்திரேலியா மற்றும் இ
தியா ஆகிய இரு நாடுகளி
வர்த்தகம் மற்றும் முதலீட்
உறவுகளை மேலும் வலுப்
படுத்த நடவடிக்கை எடுக்கப்படு
வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பல
மற்றும் விடுமுறை விசா, 202
ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆ
திகதி முதல் செயற்படும். இ
மக்கள் பயணம் செய்வதை எ
தாக்கும் மற்றும் மக்களின
யேயான உறவை அதிகரிக்கு
என குறிப்பிட்டுள்ளார். (



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கை அடையும் வரை
# ரினை நிறுத்த மாட்டோம்

## ல் பிரதமர் திட்டவட்டம்

ம்)

**ல்லா அமைப்பு ஒழிக்கப்படும் வரை இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும்" என அந்நாட்டு பஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாகத் ளார்.**



ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க நெதன்யாகு அமெரிக்கா வந்தார். அப்போது அவர் கூறியதாவது.

உலகளாவிய போர் நிறுத்த அழைப்புகளை நாங்கள் நிராகரிக்கிறோம். வான் வழித் தாக்குதல்களை தீவிரப்படுத்த உள்ளோம். எங்கள் கொள்கை தெளிவாக உள்ளது. நாங்கள் முழுபலத்துடன் ஹிஸ்புல்லாவைத் தொடர்ந்து தாக்கி வருகிறோம்.

ஹிஸ்புல்லா அமைப்பினரின் பதுங்கும் இடங்கள் அனைத்தும் ஒழிக்கப்படும் வரை இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தும். நாங்கள் நிறுத்தமாட்டோம். இது எங்கள் கொள்கை. யாரும் தவறாக நினைக்க வேண்டாம். இவ்வாறு பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பாலஸ்தீனத்தின் காசா நகர் மீது இஸ்ரேல் போர் தொடுக்க தொடங்கிய நாளில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் நாட்டின் மீது ரொக்கெட் குண்டுகள் மற்றும் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடியாக லெபனானில் இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்துகிறது. இருதரப்பு மோதல் பிராந்திய அளிவில் பெரிய போராக வெடிக்கும் அபாயம் இருப்பதாக உலக நாடுகள் தொடர்ந்து கவலை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்று வரும் தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் பலியாகி உள்ளனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர். (6)

## லியா
## ப்பு

வர்களுக்கு
மில்லியன்
கலாசாரம்,
ம்படுத்த 5
ஒதுக்கவும்
.
. மத்திய
காயல் சமூக
ளியிட்டுள்ள
துறைகளில்
மற்றும் இந்
நாடுகளின்
முதலீட்டு
ும் வலுப்ப
டுக்கப்படும்.
ன் கீழ் பணி
விசா, 2024
டோபர் 1ஆம்
படும். இது
ய்வதை எளி
மக்களிடை
அதிகரிக்கும்
ர். (6)



## துப்பாக்கி பிரயோக தாக்குதலை தடுக்க அமெரிக்காவில் புதிய சட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வர அதிபருக்கான நிறைவேற்று அதிகாரம் மூலம் புதிய சட்டத்தை கொண்டு வரப் போவதாக ஜோபைடன் அறிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில் கூறியதாவது.

பின்னர் ஜோபைடன் கூறும்போது அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறையை முடிவுக்கு கொண்டு வர, முதலில் அமெரிக்காவில் துப்பாக்கி பிரச்சினை பற்றி நாம் வெளிப்படையாகப் பேச வேண்டும்.

அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறையால் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, நோய் அல்லது விபத்துக்களில் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை விட அதிகம். இது மிகவும் வேதனையானது என்றார்.

இதற்கிடையே துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலை தடுப்பதற்கான புதிய சட்டத்தில் ஜோபைடன் கையெழுத்திட்டுள்ளார்.

குறிப்பாக பள்ளிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தின. அமெரிக்காவில் இந்த ஆண்டு இது வரை 385 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## வினோதமான முறையில் பெண் ஒருவர் உயிரிழப்பு

### விவாதமான சர்கோ பாட் பெட்டி

(வோஷிங்டன்)

அமெரிக்க பெண் ஒருவர் வித்தியாசமான முறையில் தற்கொலை செய்து கொண்டுள்ளது சமூக வலைத்தளங்களில் விவாத பொருளாகியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் கருணைக் கொலை செய்வதற்கென்றே சர்கோ பாட் பெட்டி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பெட்டியில் ஒருவர் படுத்தவுடன் கருணைக் கொலைக்கான அனுமதியை கேட்டு பதிவு செய்யப்பட்ட குரல் ஒலிக்கும். அதை ஏற்று பொத்தானை அழுத்தியவுடன் பெட்டியின் மூடி சாற்றிக்கொள்ளும்.

உள்ளே உள்ள காற்றில் ஒக்சிஜன் முழுமையாக நீங்கி நைட்ரஜன் நிரம்பும். அப்போது உள்ளே இருப்பவர் மூச்சுத் திணறி இறந்து விடுவார்.

இந்த இயந்திரத்தை பயன்படுத்தி முதல்முறையாக 64 வயதான அமெரிக்கப் பெண் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நீண்டகாலமாக நோய் பாதித்து அது குணமாகாத நிலையில் அமைதியான முறையில் இறக்க விரும்பி அவர் இந்த முறையைத் தேர்வு செய்திருந்தார். ஆனால், விதிகளை மீறியதாக கூறி இந்த தற்கொலைக்கு உதவியவர்களை சுவிஸ் காவற்துறை கைது செய்துள்ளது.

தற்கொலை தீர்வல்ல. புதிய தலைமுறை மறுபுறம் இது போன்று தற்கொலையை ஊக்குவிப்பது சரியான செயல்தானா என்ற விவாதமும் சமூக வலைத் தளங்களில் எழுந்துள்ளது. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்களின் எண்ணிக்கை 38,874 ஆக அதிகரிப்பு

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

(கொழும்பு)

இந்த வருடம் 38,874 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள் ளது. அதன்படி கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹாவை அண்மித்த பகுதிகளில் இருந்து நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாக விசேட சமூக வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித் துள்ளார்.

எதிர்காலத்தில் இந்தத் தொகையை குறைக்க தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் கொழும்பு, களுத்துறை, கம்பஹா தவிர, கண்டி, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் இந்த சில வாரங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள் ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார் (6)

## ஈஸ்டர் தாக்குதல்

# பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவருமான நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட 75 மில்லியன் ரூபாய் நட்ட ஈட்டை முழுமையாகச் செலுத்தத் தவறியதன் காரணமாக இந்தக் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இதன்படி, ஒக்டோபர் 7 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு நிலந்த ஜயவர்தனவுக்கு அழைப்பாணை அனுப்ப பிரதம நீதியரசர் தலைமையிலான ஏழு பேர் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது. (6)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 180 | 150 | 140-160 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 300 |
| தக்காளி | 200 | 250 | 180 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 220 | 150-200 | 200 |
| கோவா | 130 | 350 | 300 | 280 | 400 |
| கரட் | 250 | 250 | 300 | 250 | 300 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 60 | 150 | 120 | 100 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200-250 | 250 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 250 | 150-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 180 | 300 | 290 | 300 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 350-400 | 600 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 80-140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 200 | 150 | 250 |
| பயற்றங்காய் | 250 | 300 | 300 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 320 | 400 | 400 | 260 | 400 |
| பீற்றூட் | 100 | 150 | 180 | 80-150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 450 | 600 | 420 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 700 | 600-700 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 500 | 270 | 500 |
| கத்தரிதம்புள்ள | 120 | 150 | 200 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 80 | 150 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 400-450 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 140 | 130 | 80-140 | 100-140 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 600 | 1200 |
| வெங்காயபூ | 350 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 100 |

## இன்று ஒரு தகவல் 232



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மேலாளர்

ஒரு பெரிய நிறுவனம் அதில் ஒரு பொது முகாமையாளர் அவர் பதவியிலிருந்து விலகுகின்றார். அவருக்கு அடுத்தபடியாக இருந்த ஒருவர் பதவி உயர்வு பெற்று அந்தப் பொறுப்பிற்கு வருகின்றார். ஏற்கனவே இருந்தவர் மிகவும் திறமையான முகாமையாளர் என்று பெயர் வாங்கியவர். எல்லோரிடமும் அவருக்கு நல்ல பெயர். அதனால் புதிதாக வந்தவர் அவரிடம் யோசனை கேட்டார்.

ஊழியர்களிடம் நல்ல பெயர் வாங்குவது எப்படி? என்றார். இதற்கு அவர் கூறினார். ஒரு திறமையான முகாமையாளர் அல்லது மேல் அதிகாரிக்கு இருக்க வேண்டியது இரண்டு. ஒன்று நேர்மை இன்னொன்று சாமர்த்தியம் என்றார்.

நேர்மை என்றால் அது எப்படி என்று கேட்டார் இவர். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது தான் நேர்மை. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் எப்படியாவது வாக்குறுதியை காப்பற்றிட வேண்டும் அது தான் நேர்மை என்றார் அவர்.

சரி சாமர்த்தியம் என்பது என்ன? என்று கேட்டார். அப்படிப்பட்ட வாக்குறுதி எதையும் கொடுக்காமலே இருப்பது தான் சாமர்த்தியம் என்றார். ஆகவே முகாமைத்துவம் என்பது சாதாரண விடயம் அல்ல.

ஒரு முகாமையாளர் எப்படி இருக்க வேண்டும். ஊழியர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருப்பது நல்லது. அப்போது தான் வேலை நடக்கும்.

இது சம்மந்தமாக அமெரிக்காவிலே ஒரு ஐந்நூறு மேல் அதிகாரிகளிடம் ஆய்வு நடத்தி வந்தார்கள். அதிலே இருந்து ஒரு ஐந்து விடயம் மிகவும் முக்கியம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். வரிசையாக சொல்கிறேன் கேட்டுக் கொள்ளுங்கள்.

ஒரு காரியம் மிகவும் நல்லபடியாக, வெற்றிகரமாக நடந்து முடிகிறது. அந்த வெற்றிக்கு வேலை செய்கின்ற பணியாளர்களும் காரணம் என்றால் அவர்களுக்கும் அதில் பங்குண்டு என்றால் அதை மனதார ஒப்புக் கொண்டு பாராட்டுங்கள். அப்படிச் செய்யாமல் இருப்பது நேர்மையில்லை.

ஏதோ எல்லாம் உங்களாலே தான் நடக்கின்றது என்கின்ற மாதிரி நடக்காதீர்கள். இரண்டாவது எல்லோரிடமும் மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளுங்கள். தேவையற்ற அலுவலக தோரணைகள் வேண்டாம். மற்றவர்கள் உணர்ச்சிக்கும் ஆசைக்கும் மதிப்புக் கொடுங்கள். அவற்றிலெல்லாம் உண்மையான அக்கறை காட்டுங்கள்.

ஒருவர் அடுத்த மாதம் என் மகளிற்கு திருமணம் வைத்திருக்கிறேன் என்று சொன்னால். அப்படியா சந்தோஷம் என்று சொல்லி அவர் கேட்ட விடுமுறையைக் கொடுங்கள். அந்த நேரம் வேலை இருக்கிறது திருமணத்தை வேறு வைத்திருக்கின்றீர் என்று சொல்லி வெறுப்பேற்றாதீர்கள்.

மூன்றாவது அந்த விடயத்திலேயும் இது இப்படித் தான் இருக்கும் என்று தீர்மானம் செய்யாதீர்கள். உங்களுக்கு எது பிடிக்குமோ அது தான் உண்மையாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை.

சில உண்மைகள் உங்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் பிரச்சினைகளுக்கு அது தான் சரியான தீர்வு என்றால் நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நான்காவது ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைக்கும் போது நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர் குழம்பாமல் இருப்பார். உங்கள் பேச்சும் எழுத்தும் சுருக்கமாக இருக்க வேண்டும். வளவள என்று இருக்கக் கூடாது. குறிப்பாக இன்னதைச் செய் என்று உத்தரவு போடும் போது இது மிகவும் முக்கியம்.

ஐந்தாவது குறிப்பு உங்கள் அதிகாரத்திற்குட்பட்டு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சௌகரியங்களைத் தாரளமாக செய்து கொடுங்கள். ஒரு தனிப்பட்ட தொழில் நிறுவனமாக இருந்தால் அவர்களுக்கு தாராளமாக கொடுங்கள். அவர்களுடைய உற்பத்தி திறனாலே தான் மேலதிகாரியாக இருக்கின்றீர்கள். அதை நினைவில் வைத்திருங்கள்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நீங்கள் ஒரு நல்ல மேலதிகாரி அல்லது முகாமையாளர் அல்லது முதலாளி . அனுபவத்திலேயிருந்து சேகரம் செய்த விடயங்கள் இது. அதனாலே இதை ஏதோ வெறும் உபதேசம் என்று நினைத்து அலட்சியப்படுத்த வேண்டாம்.

ஒரு விவரம் தெரியாத முதலாளி. அவருக்கு தகுந்த மாதிரி ஒரு வேலைக்காரன். அவர் அவனைக் கூப்பிட்டார். கடைக்குப் போய் கத்தரிக்காயும் வெண்டக்காயும் உருளைக் கிழங்கும் வாங்கிக்கொண்டு வா என்றார். சரி என்று போன இவன் அதிக நேரம் கழித்து திரும்பி வந்தான். ஏண்டா இவ்வளவு நேரம் என்று கேட்டார்.

மூன்று வகை பொருட்கள் வாங்கச் சொன்னீர்களே அதனாலே தான் லேட். கத்திரிக்காய் வாங்க ஒரு தரம் போனேன். வெண்டக்காய் வாங்க ஒரு தரம் போனேன். உருளைக்கிழங்கு வாங்க ஒரு தரம் போனேன் என்றார். அடப்பாவி உனக்கு சொந்தப் புத்தியே கிடையாதா? ஒரே தடவையில் மூன்றையும் வாங்கியிருந்தால் அலைச்சல் மிச்சமாகியிருக்குமே என்றார். இனிமேல் அப்படி நடக்குறேன் என்றார்.

ஒரு நாள் அவருக்கு நெஞ்சுவலி. உடனே இவனைக் கூப்பிட்டு போய் சீக்கிரம் டொக்டரை அழைத்து வா என்றார். இவன் ஓடினான். மூன்று பேரோடு திரும்பி வந்தான். டொக்டரை மட்டும் தானே அழைத்துக் கொண்டு வரச் சொன்னேன். மற்ற இரண்டு பேர் யாருடா என்று கேட்டார்.

அதற்கு அவன். அலைச்சல் மிச்சமாகட்டும் என்று அவங்களையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். ஒரு வக்கீல் உயில் எழுத உபயோகப்படுவார். இன்னொருத்தர் ஈமச்சடங்கு செய்கின்றவர். ஏதாவது ஆகிவிட்டது என்றால் உபயோகப்படுவாரே என்று அவரையும் அழைத்து வந்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீதிகளைத் திறக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதி அநுரவிற்கு அங்கஜன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 4 வீதிகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு யாழ். தேர்தல் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் மூடப்பட்டுருந்த இரண்டு வீதிகளை மீண்டும் மக்கள் பாவனைக்காக திறக்க ஜனாதிபதி நேற்று உத்தரவிட்ட நிலையில் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள நான்கு வீதிகளையும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் மூலம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பொதுமக்களின் வாழ்க்கைக்கு முக்கியமான பல வீதிகள் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ளதால், இந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக,

1. யாழ்ப்பாணம் - பலாலி வீதி (கிழக்கு பக்கம்): வயாவிளான் மத்திய கல் லூரிக்கு அடுத்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் எஞ் சியுள்ள வீதி இராணுவ கட்டுப் பாடுகளில் இருந்து விடு விக்கப்பட வேண்டும். இந்த வீதி பருத்தித்துறை பொன்னாலை வீதியுடன் இணைவதுடன் உள்ளூர் போக்குவரத்திற்கு இன்றியமையாததாகும்.

2.அச்சுவேலி வயாவிளான் - தோளக்கட்டி வீதி: இந்த முக்கிய வீதி மூடப்பட்டுள்ளதால், அப்பகுதியிலுள்ள முக்கியமான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செல்வதற்கு இடையூறாக உள்ளது.

3. வ்யாவிளான் யாழ் விமான நிலைய ஓடுபாதை பக்க வீதி: கட்டுவன் சந்தி ஊடாக இந்த வீதியை திறப்பதன் மூலம் யாழ் சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான தொடர்பை கணிசமாக மேம்படுத்த முடியும்.

4. காங்கேசன்துறை - கீரிமலை வீதி (ஜனாதிபதி அரண்மனை வீதி): வரலாற்று மற்றும் கலாசார தளத்திற்கு இட்டுச் செல்லும் இந்த வீதி மீண்டும் திறக்கப்படுவதால், உள்ளூர் சமூகங்கள் பய னடைவதுடன் இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும்.

ஆகவே இவ் வீதிகள் மீளத் திறப்பதால் யாழ் மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பதோடு எமது தேசத்தின் அமைதியான வளமான எதிர் காலதுக்கும் உறுதுணையாக அமை யும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-33)

### கடவுச் சீட்டு விவகாரம் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு

(கொழும்பு)

இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் கடவுச் சீட் டுக்களை கொள்வனவு செய்வதற்காகக் கடந்த அரசாங்கத்தில் மேற்கொண்ட அமைச்சரவை தீர்மானத்தினை நடை முறைப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

எபிக் லங்கா தனியார் நிறுவனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவைப் பரிசீலனை செய்ததை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மொஹமட் லபார் தாகீரினால் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம், உரிய கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் இந்தக் கடவுச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் இது முற்றிலும் சட்ட விரோதமானது எனவும் மனுதாரர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3232

வருண்




திலக்ஷன்




தனா

**அதிகாரி** : ஏம்மா ஆபீசுக்கு லேட்டு?

**ஸ்டாப்** : மாடிப் படியில இறங்கும்போது உருண்டு கீழ விழுந்துட்டேன் சார்.

**அதிகாரி** : அப்ப சீக்கிரம் வந்திருக்கணுமே..

திவ்யா




கிருஷ்சாந்




தர்சிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

592





"அப்பனே! சமய சஞ்சீவியாக வந்து சேர்ந்தாய்! இல்லாவிடில் என் நிலைமை என்ன ஆகியிருக்குமோ, தெரியாது!" என றான் வல்லவரையன்.

"இதுதான் உன் தொழில் ஆயிற்றே? நீ சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளவேண்டியது யாராவது வந்து உன்னை அந்த நெருக்கடியிலிருந்து விடுவிக்க வேண்டியது!" என்று எகத்தாளம் செய்தான் ஆழ்வார்க்கடியான்.

இருவரும் ஜனக்கூட்டம் அவர்களைத் தள்ளிக் கொண்டு போகாத வண்ணம் வீதி ஒரமாக ஒதுங்கி நின்றார்கள். கூட்டம் போனபிறகு வந்தியத்தேவனுடைய கையை ஆழ்வார்க் கடியான் பற்றிக்கொண்டு வேறு திசையாக அவனை அழைத்துச் சென்றான். அரண்மனைகள் இருந்த வீதியில் முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கும் பூட்டிக் கிடந்த கோடி வீட்டில் அவர்கள் புகுந்தார்கள். கொல்லைப்புறத்தில் இருந்த நந்தவனத்தில் பிரவேசித்துக் கொடி வழிகளில் நடந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் நீல நிற ஓடை தெரிந்தது? அதில் ஒரு ஓடம் மிதந்தது. ஓடத்தில் ஒரு மாதரசி இருந்தாள். அவளைக் கண்டதும் வந்தியத்தேவனுடைய உள்ளம் துள்ளிக் குதித்தது.

### 20 ஆம் அத்தியாயம்
### தாயும் மகனும்

அன்னை அழைத்துவரச் சொன்னதாகச் சேவகன் வந்து கூறியதன் பேரில் மதுராந்தகன் செம்பியன் மாதேவியைப் பார்க்கச் சென்றான். சிவபக்தியிற் சிறந்த அந்த மூதாட்டியின் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. ஒரு காலத்தில் மதுராந்தகனும் அன்னையிடம் அளவிலாத பக்தி கொண்டிருந்தான். இப்போது அந்தப் பக்தி, கோப வெறியாக மாறிப்போயிருந்தது. பெற்ற மகனுக்குத் துரோகம் செய்து, தாயாதிகளின் கட்சி பேசிய தாயைப்பற்றிக் கதைகளிலே கூடக் கேட்டதில்லையே! தனக்கு இப்படிப்பட்ட அன்னையா வந்து வாய்க்கவேண்டும்? இதை நினைக்க நினைக்க அவன் உள்ளத்திலிருந்த அன்பு அத்தனையும் துவேஷமாகவே மாறி நாளடைவில் கொழுந்துவிட்டு வளர்ந்திருந்தது.

அபூர்வமான சாந்தம் குடிகொண்ட அன்னையின் முகத்தைப் பார்த்ததும் கொஞ்சம் அவனுடைய கோபம் தணிந்தது. பழைய வழக்கத்தை அனுசரித்து நமஸ்கரித்து எழுந்து நின்றான்.

"சிவபக்திச் செல்வம் பெருகி வளரட்டும்!" என்று மகாராணி ஆசி கூறி, அவனை ஆசனத்தில் உட்காரச் செய்தார். அந்த ஆசீர்வாதம் மதுராந்தகனுடைய மனத்தில் அம்பைப் போல் தைத்தது.

"மதுராந்தகா! என் மருமகள் சுகமா? உன் மாமனார் வீட்டிலும், தனாதிகாரியின் வீட்டிலும் எல்லோரும் சௌக்கியமா?" என்று அன்னை கேட்டார்.

"எல்லோரும் சௌக்கியமாகவே இருக்கிறார்கள். அதைப் பற்றித் தங்களுக்கு என்ன கவலை?" என்று குமாரன் முணுமுணுத்தான்.

"தஞ்சையிலிருந்து புறப்படுவதற்கு முன்னால் நீ சக்கரவர்த்தியைப் பார்த்தாயா? அவருடைய உடல் நலம் தற்சமயம் எப்படியிருக்கிறது?" என்று மகாராணி கேட்டார்.

"பார்த்து விடை பெற்றுக் கொண்டுதான் புறப்பட்டேன். சக்கரவர்த்தியின் உடம்பு நாளுக்கு நாள் நலிந்துதான் வருகிறது. உடல் வேதனையைக் காட்டிலும் மனவேதனை அவருக்கு அதிகமாயிருக்கிறது" என்றான் மதுராந்தகன்.

"அது என்ன குழந்தாய்? சக்கரவர்த்தி மனம் வேதனைப்படும்படியாக என்ன நேர்ந்தது?"

"குற்றம் செய்தவர்கள், அநீதி செய்தவர்கள், பிறர் உடைமையைப் பறித்து அனுபவிக்கிறவர்கள் மனவேதனை கொள்வது இயல்புதானே?" என்ன சொல்கிறாய்? சக்கரவர்த்தி அவ்வாறு என்ன குற்றம், அநீதி செய்துவிட்டார்?"

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## எத்தன் செய்த தந்திரம்

ஆம்... போன உயிரல்லவா மீண்டும் திரும்பி வந்திருக்கிறது. வணிகர் அவர் மனைவியை மட்டும் அருகே வரும்படி கூப்பிட்டார். அவளும், கட்டிலின் ஓரமாய் வந்து நின்றாள். "நான் இறந்து போய்விட்டதென்னவோ உண்மைதான். ஆனால், சிறிது நேரம் மட்டும் எமதூதர்களள, என் உயிரைச் சற்று விட்டுப் பிடித்து இருக்கின்றனர். நான், போன மாதம் பக்கத்து ஊரு பங்காரு நாயுடுவிடம், ஐநூறு வெள்ளிப் பணத்தைக் கடனாக வாங்கியிருந்தேன். அதைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்!" என்றார்.

இப்படி வணிகர் கூறியதும், ஆமாம்! சாகும் போது கடனோடு சாகக் கூடாது என்றனர். அந்தக் கட்டிலைச் சுற்றி நின்ற கூட்டத்தினர். அது சரி வணிகரே நீங்க சொன்ன அந்தப் பங்காரு நாயுடுவை, நாங்கள் எப்படி அடையாளம் கண்டு கொள்வது? என்று அங்கிருந்தவர்களில் விடயம் தெரிந்த ஒருவர் தான் இப்படிக் கேட்டார். இப்போது நண்பகல் ஆகிறதல்லவா இன்று மாலை ஆறு மணிக்கெல்லாம் இங்கே வெள்ளை வேட்டி, சிவப்புச் சட்டை, நீலத்துண்டு அணிந்து, கையில் வெற்றிலை டப்பாவுடன் ஒருவர் வருவார். நெற்றியில் பெரிய நாமம் கூடப் போட்டிருப்பார். அவர் தான் பங்காரு நாயுடு! என்று முடித்தார் கட்டிலில் பிணமாய்க் கிடந்த வணிகர். சரிங்க அவரிடமே கொடுத்துவிடுகிறேன், என்று தலையாட்டினாள் வணிகரின் மனைவி. அதற்குப் பிறகு வணிகருக்கும் [illegible] முடியவில்லை. கட்டிலுக்குக் கீழே உள்ள அந்த மரப்பெட்டிக்குள் ஒளிந்துகொண்டு எத்தன் நடத்தும் இந்த நாடகத்தை, சற்று தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த கொமுரு, அந்தத் திருக்கடையூர் எத்தனின் சாமர்த்தியத்தை எண்ணி மிகவும் வியந்து போனான்.

கட்டிலுக்குக் கீழே இருக்கும் இந்த எத்தன், இனி யாரும் அறியாதபடி முதலில் வெளியே வந்தாக வேண்டும். பின்னரே, பங்காருநாயுடு போல வேடம் போட்டு ஏமாற்ற முடியும். ஏன் நாமே இந்த வேடத்தைப் போட்டு இங்கிருப்பவர்களை ஏமாற்றி, இந்த ஐநூறு வெள்ளிப் பணத்தையும் அப்படியே அடித்துக் கொண்டு போகக் கூடாது. இப்படி யோசிக்கலானான் கொமுரு. அவ்வளவுதான். உடனே புறப்பட்டான் அந்த எண்ணத்தைச் செயலாக்க. ஒரு துணிக் கடைக்குச் சென்று, வெள்ளை வேட்டி, சிவப்புச் சட்டை, நீலத் துண்டு போன்றவற்றை வாங்கி அணிந்து கொண்டான். நெற்றியில் பெரிய நாமமும், கையில் வெற்றிலை டப்பாவுடனும், வணிகர் வீடு போய்ச் சேர்ந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் குணங்களின் அனுபவத்தை அதிகப்படுத்தும் எண்ணங்களை செயலில் கொண்டு வாருங்கள். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேசத்திலே யாருஞ் சதமல்ல நின்றாள் சதங் கச்சியேகம்பனே!

இறைவா! வியத்தகு பிரபஞ்சத்தைப் படைத்தருளிய நீ ஆடுகின்ற ஆட்டம் கொஞ்சமா என்ன?

ஆட்சி மாறுகிறது. காட்சி தொடங்குகிறது. அதே காட்சி மீண்டும் மாறுகிறது.

அடடா! உன் திருவிளையாட்டின் உட்பொருளை உணர்வதற்கு எவருமில்லை. போதாக் குறைக்கு பார்த்தசாரதியாக குருசேத்திரத்தில் கீதோபதேசம் செய்தருளினாய்.

**இன்று உன்னுடையது நாளை இன்னொருவருடையதாகிறது. நீ எதைக் கொண்டு வந்தாய் இழப்பதற்கு...**

இவ்வுபதேசம் மானிட சமூகத்தின் செவிகளைச் சென்றடைந்திருந்தால், காலிமுகத்திடலில் வாகனங்களை நிறுத்த வேண்டிய தேவை என்ன?

எப்போது பதவி பறிபோனதோ அந்தக் கணமே அரச வாகனங்களை – அரச சொத்துக்களை ஒப்படைத்திருக்க வேண்டுமல்லவா?

அதைச் செய்யாமல் இருந்தது ஏன்?

சொத்துக்கள் மீது கொண்ட பேராசையன்றோ! மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்தவர்கள் எத்துணை நேர்மையாக நடந்திருக்க வேண்டும்.

ஆனால் அந்தப் பண்பாடு இலங்கை அரசியலில் இல்லாமல் போயிற்று.

அதுமட்டுமல்ல. ஆளுநர் பதவிகளில் இருந்தவர்கள் செய்த அட்டகாசம் கொஞ்சமா என்ன? தங்களை நியமித்த ரணில் விக்கிரமசிங்க சாட்சாத் ஈஸ்வரன் போல நினைத்த அவர்களை என்னவென்று சொல்வது.

பார்த்தீர்களா! ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோற்று, ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியபோது, ஆளுநர்களும் அவமானப்பட்டு, தலைகுனிந்து ஆளுநர் அலுவலகங்களை விட்டு வெளியேறினர்.

இங்குதான் நிலையாமை என்பதன் பொருளை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

உண்மை. வடக்கு மாகாணத்துக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் வருகை தந்து, வடக்கின் ஆளுநரைச் சந்திப்பார்கள். சந்திப்பின் முடிவில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு குறித்த நாடுகள் உதவுமென தூதுவர்கள் உறுதி அளித்தார்கள் என்பதாக ஆளுநர்; அறிக்கை வெளியிடுவார்.

அப்படியானால், அந்த உதவிகள் எங்கே? அந்த உதவியால் வாழ்வு பெற்ற குடும்பங்கள் எத்தனை.

அந்தோ! எத்தனை ஏழைகள் ஒரு நேர உணவுக்கே அல்லாடும்போது, காலுக்கு மேல் கால் போட்டு அட்டணக் காலில் இருந்த பதவி எங்கே?

இப்போது இப்பகுதியின் தலைப்பாக உள்ள பட்டினத்தடிகளின் பாடலை ஒரு கணம் படியுங்கள். தத்துவசாரம் புரியும்.

# ஜனாதிபதி மாளிகைக்கு அருகிலுள்ள வீதிகள் மக்கள் பாவனைக்காக திறப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் உள்ள சர் பரோன் ஜயதிலக மாவத்தை மற்றும் ஜனாதிபதி மாவத்தை நேற்று வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்புரைக்கமைய இந்த வீதிகள் திறக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் இதுவரை உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தன.

ஆனால் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அந்த அனைத்து வீதித்தடைகளும் அகற்றப்பட்டு பல வருடங்களின் பின்னர் அப்பகுதியிலுள்ள வீதிகள் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளன. (ம-7)

# அநுர ஜனாதிபதியாக வந்ததாலேயே வடக்கு ஆளுநர் பதவியை ஏற்றேன்

## கடமையைப் பொறுப்பேற்ற வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

ஊழலற்ற மக்கள் சேவையை முன்னெடுப்பதற்குப் புதிய ஜனாதிபதி கிடைத்தமை இறைவனின் செயலாகும். அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக வந்ததால் மாத்திரமே நான் ஆளுநர் பதவியை ஏற்றுக்கொண்டேன் என புதிய வடக்குமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்ற வேதநாயகன், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கிடைத்துள்ள ஜனாதிபதியால், நாம் எவருக்கும் பயப்படாது மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய ஒருவர் என்பதைத் தெரிவிக்கின்றேன். அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக வந்ததால் மாத்திரமே ஆளுநர் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

வேறு எந்த ஜனாதிபதி வந்திருந்தாலும் இந்தப் பதவி எனக்குக் கிடைத்திருக்கவும் மாட்டாது. வேறொருவர் எனக்குப் பதவியை தந்திருந்தாலும் நான் இதனை ஏற்றுக் கொண்டிருக்கவும் மாட்டேன். யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் புதிய ஆளுநர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ம-7)

# இலங்கை-பாகிஸ்தான் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்றத்துக்கும் பாகிஸ்தான் பாராளுமன்ற சேவைகள் நிறுவகத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஜனநாயக மரபுகளை வளர்ப்பதற்கும் சட்டமாக்க நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கிலும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் பாராளுமன்ற சேவைகள் நிறுவகத்தின் சார்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பாஹீமுல் அஸீஸும் இலங்கை பாராளுமன்றம் சார்பில் பாராளுமன்ற செயலாளர் குஷானி ரோஹன தீரவும் கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கை பாராளுமன்ற பணியாளர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும்போது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பயனுள்ளதாக அமையும் எனத் தாம் நம்புவதாக இலங்கை பாராளுமன்ற செயலாளர் குஷானி ரோஹனதீர இதன்போது தெரிவித்துள்ளார். (ம-7)

# கோழி இறைச்சி விலை குறைவதற்கு வாய்ப்பு

(கொழும்பு)

கோழி இறைச்சியின் விலை அடுத்த இரு வாரங்களுக்குள் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் உரிமையாளர்கள்சங்கம் தெரிவித்துள்ளது.

கோழி இறைச்சிக்கான தேவை வெகுவாக குறைந்துள்ளதாகவும், இதன் காரணமாக அடுத்த இரண்டு வாரங்களில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 100 ரூபா தொடக்கம் 150 ரூபா வரை குறையலாம் எனவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு கிலோ கோழி இறைச்சியின் சில்லறை விலை 1,000 முதல் 1,100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்தார்.

அடுத்த பதினைந்து நாட்களில் இந்த விலை 900 முதல் 850 ரூபாய் வரை குறையலாம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை முட்டையின் விலை யும் எதிர்வரும் பண்டிகை நாட்களில் 20 ரூபா வரையிலும் குறையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (ம-7)

# இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படத் தயார்

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்ட வரைவை தான் பூர்த்தி செய்வேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எழுத்து பூர்வமாக கூறியிருக்கிறார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் இணங்கி செயற்பட தாம் தயாராக இருப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆற்றல் கொண்ட, அனுபவம் வாய்ந்த புது முகங்களையும் இளைஞர்கள் மற்றும் பெண்களையும் களமிறக்கும் என்றும் அது தொடர்பில் மத்திய செயற்குழு இறுதித் தீர்மானம் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து நேற்று முன்தினம் விளக்கமளித்து உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஆட்சிப் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல மாற்றங்களை கிரமமாக மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் பொதுத் தேர்தலுக்கு பின்னரும் அவர்களால் ஒரு உறுதியான ஆட்சியை அமைக்க முடியுமாக இருந்தால் அவர்களின் முன்னேற்றகரமான விடயங்களுக்கு எங்களின் ஆதரவு இருக்க வேண்டும். அதற்கான ஆதரவு இருக்கும்.

ஏனென்றால் இது போன்ற பல விடயங்களை நாங்களாகவே பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறோம். அதற்காக பாடுபட்டிருக்கிறோம். தமிழர் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்திலும் கூட 2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரையிலான முயற்சியினுடைய வரைவை தான் பூர்த்தி செய்வேன் என்று எழுத்து பூர்வமாக கூறியிருக்கிறார்.

ஆகையால், இந்த விடயங்கள் தொடர்பில் அவர்களுடன் சேர்ந்து இணங்கி செயலாற்றுவதற்கும் ஊழல் ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் நிச்சயமாக வாய்க்கும். நாங்களும் அதனை செய்ய வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்புமாகும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

22

3ஆவது நிரல் அல்லது ஒருங்கிணை நிரல் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாணசபை களுக்கும் சமாந்தரமாக செய்யக்கூடிய (36) விடயங்கள் இடம் பெறுகின்றன.

மாகாணசபைகள் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக (அவை தேசிய கொள் கைக்கு உட்பட்டவை என கருதப்படாதவிடத்து) தம் மாகாணத்தின் தேவைக்கேற்ப நியதிச் சட்டங்களை இயற்றலாம். ஒதுக்கப்பட்ட விடயங் களில் திருத்தங்கள் செய்ய வேண்டுமாயின் ஜனாதிபதிக்கு அத்திருத்தங்கள் அனுப்பப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பின்னர் பெரும்பான்மை வாக்குகளால் சட்டமாக்கப்ப டலாம்.

ஒருங்கிணை நிரலில் காணப்படும் விட யங்கள் தொடர்பாக மத்திய அரசு எல்லா மாகாணங்களையும் கலந்தாலோசித்த பின்னரே பாராளுமன்றத்தின் மூலம் சட்டமியற்ற முடியும். அவ்வாறே எந்தவொரு மாகாண சபையும் பாராளுமன்றத்தை கலந்தாலோசித்த பின்னரே ஒருங்கிணை பட்டியலில் சட்டமியற்றலாம். தேசிய கொள்கைக்கு உட்பட்டவை எல்லாம் மத்திய அரசைச் சார்ந்தது.

தேசிய அளவிலான கொள்கையாக பாராளு மன்றம் வகுக்கும் எல்லா விடயங்களும் அதிகாரங்களும் ஒதுக்கப்பட்ட பட்டியல் ஏற்பாடு செய்கிறது. 13 ஆவது திருத்தச் சட்டம், தேசியக் கொள்கை பாராளுமன்றச் சட்டவாக்கம் மூலமே இருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ள நிலையிலும் பதவிக்கு வரும் அரசுகள் எல்லாம் தேசிய கொள்கையை அமைச்சரவை ஆணை கள் மற்றும் அமைச்சர்களின் சுற்று நிருபங்கள் மூலம் வடிவமைத்து வருகின்றதை காணக் கூடியதாகவுள்ளது.

மாகாண சபைகளின் செயற்பாடுகள் பற்றி தெரிந்து அறிக்கை தர 1995இல் அசோக குண வர்த்தன ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. மாகாணசபைப் பட்டியலில் உள்ள விடயங் களைக்கூட மத்திய அரசின் அமைச்சர்கள் தேசியக் கொள்கை அமுலாக்கம் என்ற சாட்டில் தமது ஆதிக்கத்தை மாகாண அமைச்சர்களின் நிர்வாகத்தில் செலுத்தும் அளவுக்கு உள்ளதாக குழுவின் அறிக்கை கூறுகிறது.

மாகாண சபைச் சட்ட விதிகள் ஆளுநர் மீது மாகாண பொதுச் சேவை விடயமாகப் பல அதிகாரங்களை வைத்துள்ள நிலையில், பொதுச் சேவைகள் அமைச்சர் தொடர்ந்தும் மாகாண பொதுச் சேவை அதிகாரிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் சுற்று நிருபங்களை விடுத்து வருகிறார் என்ற விடயம் கவனத்துக்கு வந்தது. இவ்வாறு அறிக்கைகள் வெளிவந்தும் நடை முறையில் எவ்வித மாற்றங்களும் ஏற்பட வில்லை.

1988 ஆம் ஆண்டில், மாகாண சபை அமைப்பு செயற்படத் தொடங்கியபோது, மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கிணை நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாக சுமார் 300 சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. இச் சட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் அமைச்சர்களின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுக்கு உட்பட்டவையாக இருந்தன. எனவே மாகாண சபைகள் இச் சட்டங்களில் உள்ள அத்தகைய அதி காரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்ற வேண்டுமாயின் அதற்குத் தேவையான நியதிச் சட்டங்களை உருவாக்க வேண்டும்.

ஆனால் மாகாண சபைகளால் அவ்வாறான நியதிச்சட்டங்களை உருவாக்க முடியவில்லை. அதனால் அச்சட்டங்களில் பெரும்பாலானவை தற்போதும் மத்திய அரசின் அமைச்சர்களின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுக்கு உட்பட்டவையாக இருக்கின்றன.

இப் பிரச்சினையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யுமுகமாக 1989ஆம் ஆண்டின் மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் இல.12 (Provincial Councils (Consequ ential Provisions) Act No 12 1989) உருவாக்கப்பட்டது.

இதன் மூலம் 13ஆம் அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைக்கு வரும் (1987 நவம்பர் 14இற்கு) முன்னர் மத்திய அரசின் விடயங்களும் அவற்றுக்கான அதிகாரிகளும் எனக் கூறப்பட்டவை தற்போதைய மாகாணசபை விடயங்கள் எனவும் அவற்றுக்கான மாகாண அதிகாரிகள் எனவும் கொள்ளப்பட வேண்டும் என்ற திருத்தம் செய்யப்பட்டது.

இது ஒரு தற்காலிகத் தீர்வாகும். அதாவது இந்த சட்டம் ஒரு மாகாண சபை, அத்தகைய விடயங் களுக்கு தனது மாகாண நியதிச் சட்டத்தை உருவாக்காவிட்டால், மத்திய அதிகாரிகள் விரும் பினால் அவர்கள் தொடர்ந்தும் அவ் விடயங்களின் மீது அதிகாரத்தை செலுத்த முடியும் என்று பொருள்படக்கூடியதாகவே இயற்றப்பட்டுள்ளது.

மேலும் இச் சட்டம் ஒருங்கிணை நிரலிலுள்ள விடயங்களுக்கு பொருந்தக்கூடியதாக இருக்க வில்லை. இதனால் பல விடயங்கள் இந்தத் திருத்தச் சட்ட வரம்புக்குள் வராது இருப்பதாக காணப்பட்டுள்ளன.

மாகாண சபைகள் தங்களது விடயங்களுடன் முரண்பட்டு அறிந்து இவ்வாறான சட்டங்களை கண்டு அறிந்து அவசியமான மாற்றங்களைச் செய்ய நியதிச் சட்டங்களை இயற்ற வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தேவையான மனித மற்றும் பொருள் வளங்களைக் கொண்ட சட்ட வரைவுப் பிரிவு (சட்ட வரைவு செய்பவர்) அவர்களிடம் இதுவரையில்லை. சட்ட வரைவுகளைச் செய்யும் ஆற்றல் இல்லாத காரணத்தால் மாகாண சபைகள் அந்த விடயங்களில் தமது அதிகாரங் களைச் செயற்படுத்த முடியாது உள்ளன.

அத்தகைய விடயங்களில் மத்திய அரசு தொடர்ந்தும் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து வருகிறது. இதுவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளிலுள்ள மிகப்பெரிய பிரச்சினை யாகும்.

இவை பொதுவாக மற்றைய மாகாணங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதில்லை காரணம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களில் பிரதேச அரசியற் கட்சிகள் மாத்திரம் அதிகாரத்தைத் தம் வசப்படுத் தவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போன்ற தேசிய அரசியற் கட்சிகள் இந்த மாகா ணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, மேற்படி மாகாண சபைகளின் அதிகாரம் தேசிய அரசியற் கட்சிகளிடமே குவிந்துள்ளன.

தேசிய அரசியற் கட்சிகள் மாகாணத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற் படுவதில்லை. மேற்படி கட்சிகள் தேசிய அரசியல் தேவைகளை நோக்கமாகக் கொண்டே செயற் படுகின்றன. இதனால் இம் மாகாணங்களில் பிரச்சினைகளை ஏற்படுவதில்லை.

### 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி சேர்க்கப்பட்டுள்ள 9ஆம் அட்டவணையில் உள்ள 3 நிரல்களின் விபரங்கள்

மாகாண சபைகளுக்கு சட்டதுறை மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவ் வதிகாரங்கள் வரையறுக்கப்பட்டவையாகும். உறுப்புரை 154 இதற்கேற்ப மாகாண சபை களுக்கு சட்டங்கள் உருவாக்க முடியும். அவ்வாறு உருவாக்கபட்ட சட்டங்களை சரியான முறையில் மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட மாகாணத்திற்கு மாத்திரமே செல்லு படியாகும்.

மாகாண சபைப் பட்டியலின் கீழ் உள்ள 37 செயற்பாடுகள் சம்பந்தமாக நியதிச்சட்டங்கள் இயற்றவும் அதனை நடைமுறைபடுத்தவும் அதிகாரம் உண்டு.

மாகாண சபைப் பட்டியலில் உள்ள விடயங்கள்- நிரல் I

1. பொலிஸ் மற்றும் பொது ஒழுங்கு (ஒதுக் கப்பட்ட நிரலில் இல்லாவிட்டால்)
2. திட்டமிடல் (மாகாணபொருளாதார திட் டங்களை உருவாக்குதலும் செயற்படுத்தலும் )
3. கல்வியும் கல்விச்சேவைகளும் (நிரல் II மற்றும் IIIஇல் இல்லாவிட்டால்)
4. உள்ளூராட்சிச் செயற்பாடுகள் (அரசிய லமைப்பு, சபையின் கட்டமைப்பு தவிர்ந்த)
5. மாகாணங்களில் வீடமைப்புச் செயற் திட்டங்களும் கட்டிடநிர்மானமும் மேற்கொள் ளல். (தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் உள்ளடங்காத விடயங்கள்)
6. மாகாணத்துக்குட்பட்ட பாதைகள், பாலங் கள் மற்றும் ஆற்றுத் துறைகள் (தேசிய பெருந் தெருக்கள், பாலங்கள் மற்றும் ஆற்றுத் துறைகள் தவிர்ந்த)
7. (குறிப்பிடப்பட்ட) சமூக சேவைகள் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள்
8. மாகாணத்தினுள் போக்குவரத்துச் சேவை கள் (சில விடயங்கள் மட்டும்)
9. விவசாயத்துறை, கமத்தொழில் சார்ந்த சேவைகள் (விரிவாக்க சேவைகள் மட்டும்)
10. கிராமிய அபிவிருத்தி.
11. பொது சுகாதார சேவைகள், சுகாதாரக் கல்வி, போசனை (நிரல் II மற்றும் III இல் இல்லாவிட்டால்)
12. சுதேசிய வைத்திய நடவடிக்கைகள்.
13. வாடி வீடுகள் (உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ளவையும், மாகாண சபைகளின் கீழ் உள்ள திணைக்களங்களைச் சார்ந்தவையும்)
14. அடகு பிடிப்போர் (வங்கிகளால் வழங்கப் படுபவை தவிர)
15. சந்தைகள், முறைச் சந்தைகள்
16. மாகாணத்தினுள் உணவு விநியோகம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞன்...

இதில் அதேபகுதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு வெனிஸ்டன் (வயது-24) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். (ம-7,60)

## வவுனியா...

துடன், அதில் பயணித்த இளைஞனும் சம்பவ இடத்திலேயே மரணமடைந் துள்ளார்.

குருக்கல்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் சர்மிளன் (வயது-30) என்ற இளைஞரே மரணமடைந்தவ ராவார்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## மின்சார...

ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய பாராளுமன்றம் உரு வாக்கப்பட்ட பின்னரே புதிய உறுப் பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

மின்சாரக் கட்டணப் பகுப்பாய்வை மாதம் நான்கு தடவைகள் நடத்த வேண்டிய நிலையில், அது முறை யாகச் செய்யப்படவில்லை என கலா நிதி சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டி னார்.

இந்தச் சவாலான காலக்கட்டத்தில் பொதுமக்களுக்கு அதிகபட்ச நிவா ரணம் வழங்குவதற்காக மின்சாரக் கட் டணத்தைக் குறைப்பதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் மேலும் வலியுறுத்தினார். (ம-7)

## பாராளுமன்றத்...

கின்றது.

இளையோருக்கு வாய்ப்புகளை வழங்கும் விதமாகத் தேர்தல் அரசிய லில் இருந்து ஒதுங்கி தொடர்ந்தும் கட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார் எனத் தெரியவருகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் 14ம் திகதியன்று பாராளுமன் றத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலை யில் தேர்தலை எதிர்கொள்வது தொடர் பாகத் தமிழ் மக்கள் கூட்டணியின் கட்சி யினரிடையே நடைபெற்ற கூட்டத்தில் குறித்த தகவலை விக்னேஸ்வரன் தெரிவித்தாரென அறிய முடிகிறது.(ம-7)

## பிரதிப்...

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்கவினால் உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலா நிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் அவருக்கு நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

158 வருட பொலிஸ் வரலாற்றில் கான்ஸ்டபிள் ஆக சேவையில் இணைந்து கொண்டவர்கள் வரிசை யில் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுக்கொண்டிருக்கும் ஒரே அதிகாரி பிரியந்த வீரசூரிய ஆவார். (ம-7)

## உத்தியோகபூர்வ...

கள் மாதிவெலையிலுள்ள பாராளு மன்ற உறுப்பினர்களின் குடியிருப்புக் களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-7)

## புதிய அரசின்...

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொண்டு வருவதற்கு புதிய அரசாங்கம் எதிர் பார்த்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பொருளா தாரக் குழுவின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ இத னைத் தெரிவித்தார்.

அதேநேரம், 2025ஆம் ஆண்டுக் கான முழுமையான பாதீடு அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் முன்வைக் கப்பட்டு நிறைவேற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப் பட்டுள்ள திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழு வின் தலைவர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள் ளார். (ம-7)

## பாம்பு தீண்டி...

தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிந்து வந்த சாவகச்சேரி - நுணாவில் வைரவர் கோயில் பகுதியைச் சேர்ந்த வினோத் (வயது-29) என்ற ஒரு பிள்ளை யின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விஷப் பாம்புக்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7,30,33)

## வாகனங்களை...

தாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கி, கொள்கை வட்டி விகிதங்க ளான, துணை நில் வைப்பு வசதி வீதத்தினையும் மற்றும் துணை நில் கடன் வழங் கல் வசதி வீதத் தினையும் தற் போதைய மட்டத் திலேயே பேணு வதற்குத் தீர் மானித்துள்ளது.

அதன்படி, துணைநில் வைப்புவசதிவீதம் மற்றும் துணை நில் கடன் வழங் கல் வசதி வீதத்தி னையும்முறையே 8.25 சதவீதம் மற் றும் 9.25 சதவீத மாகப் பேணுவ தற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## முப்...

உடன் அமு லுக்கு வரும் வகையில் இரா ணுவம், கடற் படை மற்றும் விமானப் படை யினரை அழைக் கும் உத்தரவு அடங்கிய விசேட வர்த்தமானி அறி வித்தல் நேற்று முன்தினம் வெளி யிடப்பட்டது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பொது ஒழுங்கை நிலைநாட்டு வதற்காக முப் படையினரை ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க அழைத் துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக ஆயுதப்படையினரை அழைக்கும் வர்த்தமானி அறிவித் தலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

# போதையுடன் ஒருவர் கைது

ஐஸ் போதைப்பொருளைக் கடத்தி வந்த நபரொருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ள னர்.

விசேட அதிரடிப்படையினரின் சுற்றி வளைப்பில் நேற்று முன்தினம் மீத்திய கொட பகுதியில் வைத்து குறித்த சந் தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் படல்கும்பர பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய வர் என்பதுடன் அவரிடமிருந்து 03 கிராம் 420 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் 43,000 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டு மீத்தியகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

மஹஜன சம்பத — திகதி 2024.09.27 — சீட்டிழுப்பு இலக்கம் 5608 — E 9 6 8 1 2 5 — அத சம்பத E 8 1 2 5 — சீட்டிழுப்பு இலக்கம் 183

தன நிதானய — திகதி 2024.09.27 — சீட்டிழுப்பு இலக்கம் 1638 — F 12 18 55 69 F — 35547

மெகா பவர் — திகதி 27/09/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1956 — C 25 15 29 37 42 — 81991

லக்கி 7 VIP — திகதி 2024.09.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0434 — T 4 7 5 6 2 9 T

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3850 — சீட்டிழுப்பு திகதி 27.09.2024 — L 03 55 61 67 — L 55116

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.27 — சீட்டிழுப்பு இலக்கம் 917 — மிதுனம் 34 48 52 62 மிதுனம் — 50968 — 20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2582 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 27.09.2024 — தினம் வெள்ளி — 32 57 61 65 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,869,784.00

உத்தியோகபூர்வ முடிவுகள் — 27.09.2024 — வெற்றி வாரம் 316 — D 4 6 2 8 3 5 — 54339 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,739,428.00

சனிதா — திகதி 2024.09.27 — வெற்றி வாரம் 4743 — வர்ணம் செம்மஞ்சள் — 08 58 64 70 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,214,790.40 — 4 1 2 3 6

சசிரி — வெற்றி வாரம் 533 — 2024.09.27 — பச்சை — 43 47 50 — 07 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,765,720/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4294 — வர்ணம் கடும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2024.09.27 — தினம் வெள்ளிக்கிழமை — 10 13 33 52 மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00 — 177356

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — K 19 15 27 33 44 — 1758 — இள கபில — 27.09.2024 — வெள்ளி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 547,156,344.20

அத கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2408 — 2024.09.27 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,955,452.00 — 25 32 39 40 M — 409718

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் வாகனங்கள் அரச நிறுவனங்களுக்கு

## ஜனாதிபதி அலுவலகம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் போது அமைச்சர்கள் உட்பட அரச அதிகாரிகள் பயன்படுத்திய வாகனங்கள், விசாரணைகளின் பின்னர் மீண்டும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு அமைய 59 அரச நிறுவனங்களுக்குக் குறித்த வாகனங்கள் வழங்கப்படவுள்ளதாக அந்த அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் போது, அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பயன்படுத்திய பல வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலும் இலங்கை மன்றக் கல்லூரிக்கு அருகிலும், காலி முகத்திடல் பகுதியில் உள்ள வாகனத் தரிப்பிடம் ஒன்றிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வி8 ரக சொகுசு வாகனம், ஜிப் ரக வாகனம், ரேஞ் றோவர், மொண்டிரோ உள்ளிட்ட சொகுசு ரக வாகனங்கள் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(ம-7)


## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021

A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571

A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

(2139)

Hotline : 071 535 7799/ 071 973 9917

## கடைகள் வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நல்லூர் சூழலில் கடைகள் வாடகைக்கு உண்டு.

தரகர்கள் தேவையில்லை (2138)

070 490 9483

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (382)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention (C-1276)
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-1276) CIMS College
49A, Chapel Street, Jaffna.

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322


## பொதுக் கூட்டம்

### ஏழாலை அருள்மிகு சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேசுவரர் ஆலயம்

இடம் : ஆலய மண்டபம் நேரம் : மு.ப 10.00 மணி

காலம் : 29.09.2024 (ஞாயிற்றுக்கிழமை)

விடயம் : ஆலய தற்கால நிலைமை தொடர்பாக ஆராய்தல்.

தலைவர் திரு.நா.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறும்.

*அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

(2135) இப்படிக்கு - பரிபாலன சபை

## மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி ஆலய பரிபாலன சபை பொதுச் சபைக் கூட்டம் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

அடியார்கள், உறுப்பினர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபையினர்

(384)

# மரண அறிவித்தல்

## திருமதி குமாரலிங்கம் சரஸ்வதி



மலர்வு : 14.06.1934 | உதிர்வு : 25.09.2024

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்.நீர்வேலி, சாவகச்சேரி நுணாவில் மேற்கு மற்றும் கொழும்பினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமாரலிங்கம் சரஸ்வதி அவர்கள் 2024.09.25ஆம் திகதி புதன் கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளையா - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையா குமாரலிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பக்தவத்சலன், ரதசேகரம் மற்றும் லோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற குமாரசாமி, குமாரசிவம் மற்றும் செல்வமணி ஆகியோரின் மைத்துனியும், இதயகுமார், காலஞ்சென்ற ரஞ்சகுமார், பிறேமகுமார், சுபித்தா மற்றும் யசோதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிறேமா, நிரோஷனா, சுரேஸ்குமார் மற்றும் சண்டேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், ரதூஷன், அஸ்மிதா, அபிநயா, ஆதீஷ் மற்றும் ஜசாயினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சஹானா மற்றும் பிரதீஷ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 2024.09.29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.30 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் ஈமக் கிரியைகள் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
மகன் - பிறேமகுமார்
077 654 0410

(2131)

தகவல் :
குடும்பத்தினர்


## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு

- கொத்து ரொட்டி போடுதல்
- பிறைட்றைஸ் தயாரித்தல்
- ரொட்டி வேலை செய்தல்
- உணவு பரிமாறுதல்



போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

077 649 1027

(C-1274)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரித்தும் கொடுக்கப்படும்.

077 836 3050
075 889 5625

(2141)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 244/= | Max 3Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 277/= | Max 3Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 379/= | |
| 1 Kg prima கோதுமை மா | - 159/= | |
| 1 Kg றவை | - 284/= | |
| 1 Kg செத்தல் (No.1) | - 860/= | |
| 1 Kg மல்லி | - 380/= | |
| 1 Kg கீரி சம்பா | - 260/= | |
| 01 Ocean மீன் ரின் | - 365/= | ~~500/=~~ |
| 01 சன் பப்படம் | - 190/= | ~~225/=~~ |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= | ~~1120/=~~ |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~165/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3400/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |

400g Anchor
1010/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைகழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(383)

Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org